Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆ ஐப்பசி மீ 29 உ வியாழக்கிழமை (15 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 26 ஓசை 261

## கிராமத்தில் இல்லாத கிராமசேவையாளர்

(ஊர்காவற்றுறை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மண்கும்பான் பகுதி கிராமசேவையாளர்களில் ஒருவர் கடந்த ஆறுமாத காலமாகத் தனது கடமையைச் செய்வதற்காக இங்கு வருவதில்லை என மண்கும்பான் கிராமமக்கள் வேலணை உதவிஅரசாங்க அதிபரிடமும், விடுதலைப் புலிகளின் தீவக மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளரிடமும் (4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு - திருமலை மாவட்டங்களில்

# புலிகளின்தாக்குதலுக்கு பல ராணுவம் பலி

## ஊர்காவற்படையினர் சிலரும் மாண்டனர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதும், ஊர்காவற்படையினர் மீதும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களிலும், புலிகளின் கண்ணிவெடிகளிலும் பல இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒந்தாச்சி மடத்திலும், திருமலையில் மொறேவேவாவிற்கும் தம்பலகாமத்திற்கும் இடையில் இந்த தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. அதேவேளை அம்பாறை, மன்னார் மாவட்டங்களில் மிதிவெடியில் சிக்கிய ஐந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

## ஒந்தாச்சிமடத்தில் கிளைமர்; மூன்றுபடை பலி, இருவர் காயம்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் கிளைமர் தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்

நேற்றையதினம் காலை 6-50 மணிக்கு சிறிலங்கா இராணுவத்தினர் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் இருந்து வெளியேறி பெரிய கல்லாற்றுக்கு வந்தபோது ஒந்தாச்சி மடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கிளைமர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலால் மூன்று இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர்.

## சிப்பாய்கள் கால்கள் இழப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மாந்தோட்டம் இராணுவ முகாமைச் சுற்றி விடுதலைப் புலிகள் புதைத்து வைத்த மிதிவெடிகள் நேற்றைய தினம் காலை 7. 30 மணியளவில் வெடித்தது. அதில் சிக்கிய இராணுவத்தினர் தமது கால்களை இழந்துள்ளனர். கால்களை இழந்தோரின் எண்ணிக்கை தெரியவில்லை. (மு)

## திருமலையில் கண்ணிவெடி; ட்ரக் வண்டி முற்றாகச் சேதம்

(திருக்கோணமலை)

சிறிலங்கா இராணுவத்தின் ட்ரக் வண்டியொன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி முற்றாகச் சேதமடைந்தது. அதில் வந்த இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 6.50 மணிக்கு தம்பலகாமத்தில் மொறவேவா விமானப்படை முகாமிற்கும், பன்குளம் விமானப் படை முகாமிற்கும் இடையில் வந்துகொண்டிருந்த இராணுவ ட்ரக் வண்டி ஒன்று விடுதலைப் புலிகளின் கண்ணி (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்படை இருவர் பலி

இதேவேளை இப்பகுதியில் ஊர்காவற் படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இரு ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து கைத்துப்பாக்கியும், தோட்டாக்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (மு)

## அருள் 89 தாக்குதல்

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாம்மீது நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு விடுதலைப் புலிகள் அருள்89 தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. (மு)

## மன்னாரில் மூன்று படை காலிழந்தது

(மன்னார்)

விடுதலைப்புலிகளின் மிதி வெடிகளில் சிக்கி மூன்று இராணுவத்தினர் தமது கால்களை இழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பேசாலையில் இருந்து தலைமன்னாரை நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியில்விடுதலைப் புலிகளால் ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளில் சிக்கி மூவர் தமது கால்களை இழந்தனர்.

## படகு கடற்படையால் மூழ்கடிப்பு; அகதிகள் ஐந்து பேர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவுக்கு அகதிகளாக வள்ளத்தில் சென்ற பொதுமக்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் ஐவர் கொல்லப்பட்டனர். வள்ளமும் நீரில் மூழ்கடிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு அனலைதீவில் இருந்து 42 பொதுமக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வள்ளத்தில் செல்லும்போது இரவு 9.15 மணியளவில் சிறிலங்கா கடற்படையினர் அந்த வள்ளத்தின்மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

அவ்விடத்திலேயே மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஏனையோரில் பலர் படுகாயமடைந்தனர். இவர்களைக் கைது செய்த கடற்படையினர் தமது வள்ளத்தில் அவர்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## விமான, கடற்படைக்கு சீனாவிடமிருந்து தளபாடங்கள்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் விமானப் படைக்கும், கப்பற்படைக்கும் சீனாவிடம் இருந்து நவீன ஆயுதங்கள் பலவற்றைக் கொள்வனவு செய்ய இருப்பதாக 'ஐலண்ட்' பத்திரிகையை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அச் செய்தியில், டிசம்பர் மாத இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இந்த ஆயுதங்கள் சிறிலங்கா வந்தடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். நவீன சந்தையில் கழிப்பறை கடையாக மாறியது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர நவீன சந்தைக் கட்டத்தில் இருந்த மலசலகூடம் ஒன்று தற்போது கடையாக மாறியுள்ளது. மழையெனப்பொழிந்த குண்டு வீச்சிற்கும், எங்கெங்கோ இருந்துவந்த ஏவுகணைத் தாக்குதலுக்கும் ஈடுகொடுத்து முற்றிலும் இடிந்து நொருங்காமல் இருந்த நவீன சந்தைக் கட்டடத்தில் தளப்பகுதியில் (4ஆம் பக்கம் பார்க்க)

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை சீனத் (4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் டக்ளஸ் குழுவால் தமிழ்இளைஞர்காட்டிக்கொடுப்பு

(கொழும்பு)

கொழும்பு சென்றுள்ள தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதில் டக்ளஸ் குழுவினரால் (ஈ.பி.டி.பி) ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் இருக்கும் அகதி முகாம்கள், ஹோட்டல்கள், லொட்ஜ்கள் ஆகியவற்றில் தங்கியுள்ள தமிழ் இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்படுகின்றனர் என நேற்றைய 'தினகரனில்' செய்தி வெளிவந்துள்ளது. மேலும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சுமார் பதினைந்துபேர் சிறிலங்கா இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத்தெரியவருகின்றது.

## மீண்டும் 'ராக்கிங்'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஒதுக்குப் புறங்களில் ''ராக்கிங்'' சேட்டைகள் தற்போது ஆரம்பித்துள்ளதாகத் தெரிகின்றது. கடந்தவாரம் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்த நாட்களில் இச் சேட்டைகள் எதுவும் தென்படாத போதிலும் இவ்வாரம் ஆரம்பித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொம்படிப் பாதையில் கிழித்தெறியப்பட்ட கடிதங்கள்

(மாங்குளம்)

கொம்படிப் பாதையில் பல உள்ளூர், வெளியூர்க் கடிதங்கள் கிழித்தெறியப்பட்டுள்ளன.

கொழும்புக்குச் செல்லும் பயணிகளிடம் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் தமது உறவினர்களுக்குக் கொழும்பில் தபாலில்சேர்க்கும்படி கொடுத்தனுப்பிய கடிதங்கள் பல (4 ஆம் பக்கம் பார்க்க)

## யதார்த்த நிலையுணர்ந்து கலைஞர்கள்செயற்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கலைஞர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் யதார்த்த நிலையைஉணர்ந்து அதன் வளர்ச்சிக்கு உரமூட்டும் கருவிகளாகச் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் தினேஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அடிமட்ட பாமர மக் (4ஆம் பக்கம் பார்க்க)

## வாழப்பாடியின் குற்றச்சாட்டிற்கு தமிழக அரசு மறுப்பு

(சென்னை)

தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் ஆயிரத்துக்கதிகமான விடுதலைப் புலிகள் தங்கியிருப்பதாக தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் வெளியிட்ட கருத்தை தமிழ்நாடு அரசுச் செயலாளர் நாகராஜன் கண்டிப்பாக மறுத்துள்ளார். ஆயுத கலாசாரம், துப்பாக்கிக் கலாசாரம் என்று தமிழகத்தில் எதுவும் இடையாது என்றும், தமிழகத்தில் முகாம்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிசைவிளம்பரம்


### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல 14 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B. 1580)

### தயா அச்சகம்
### றோனியோ

மீண்டும் றோனியோ தமிழ், ஆங்கில, தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளையும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம் (மனோகரா தியேட்டர் அருகாமை) 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (B/1575)

### பெற்றுக்கொள்ளவும்

காலமே பொன் செய்யும் மருந்து. மில்க்வைற் சலவைப் பவுடர் துரித சலவைக்கும் தூய வெண்மைக்கும் உதவுகிறது. சிக்கனமானது. 50 இறாம் வெற்றுப் பைக்கற் 10 அனுப்பி மில்க்வைற் செய்தி இதழ் 179 ஐப் பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற் - யாழ்ப்பாணம். (B/1589)


## கௌரி காப்பு பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் வருடா வருடம் நடைபெறும் கௌரி விரதம் இந்தமுறை நாட்டு நிலைமைகள் காரணமாக நடத்தமுடியாதிருப்பதால், அதனை திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் அபிஷேக பூசைகளுடன் நடாத்தி காப்பு கொடுக்கப்படும். கௌரி நோன்பிருப்போர் அங்கு வந்து பெற்றுக் கொள்ளும்படி தி. மாணிக்கவாசகக் குருக்கள் கேட்டுக் கொள்கிறார்.

## திருடர் தாக்கிவிட்டு ஓடினர்

(இணுவில்)

இணுவிலில் வீடொன்றில் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர் கோஷ்டி திருட்டு முயற்சி தோல்வி அடைய வீட்டில் இருந்தவர்களைப் பலமாகத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

கடந்த திங்களன்று இரவு நடைபெற்ற இந்தச்சம்பவத்தில் க. நடராசா (வயது65), ந இரத்தினராசா (வயது59) ஆகியோர் திருடர்களின் தாக்குதலினால் பலத்த காயம் அடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1990. 11. 23ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. மகப்பேற்றியலும் மாதர் நோயியலில் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் II விரிவுரையாளர்

2. நோயியல் / உடற்றொழிலியல் / மருந்தியல் / சட்ட மருத்துவம் - விரிவுரையாளர் / சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் II

3. சட்ட மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர் (மருத்துவம் அல்லாத)

4. சட்ட மருத்துவத்தில் விரிவுரையாளர் (மருத்துவம்)

சம்பள அளவுத் திட்டம்:

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
ரூ 9. 600 - 8 x 250 - 11, 600/- மாதமொன்றிற்கு

2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
ரூ. 8, 000 - 5 x 250 - 9, 250/- மாதமொன்றிற்கு

3. விரிவுரையாளர்
ரூ. 4, 500 - 10 x 250 - 6 500/- மாதமொன்றிற்கு

(மருத்துவபீட விரிவுரையாளர் ஒருவர் முதலாவது நியமனத்தின்போது ரூ. 4, 500 சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக அதாவது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4. 900/- ரூபாவில் வைக்கப்படுவார்)

4. உதவி விரிவுரையாளர் ரூ. 3. 900/- மாதமொன்றிற்கு (நிலையானது) ஆண்டொன்றிற்கு

5. தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்
தரம் I ரூ 9, 600/- (நிலையானது)

6. தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்
தரம் II ரூ 8, 000/- (நிலையானது)

7. தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூ. 4, 900/- (நிலையானது)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x10 ச. மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல்வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

குறிப்பு:

(அ) விண்ணப்பதாரி பௌதிகவியலில் விஞ்ஞானமாணிச் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) சரு மருத்துவத்தில் அக்கறையுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

—பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990. 11. 09

(B. 1587)


மாவீரர் தினம்:

# யாழ். மாவட்ட கூட்டுறவாளர் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு

(புங்குடுதீவு)

இம்மாதம் இருபத்தோராம் திகதி முதல் இருபத்தேழாம் திகதி வரை தமிழீழப் பகுதி எங்கும் கொண்டாடப்படவிருக்கும் 'தமிழீழ மாவீரர் தினத்தை' யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள் சிறப்பாக கொண்டாட உள்ளனர்.

இதற்கென யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன ஆறு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு கோட்டங்களிலும் உள்ள சங்கப்பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோர்களுக்கிடையே பேச்சு வினாடிவினா, குழுப்பாடல், நாடகம் போன்றவற்றில் போட்டிகள் இம்மாதம் பதினேழாம் திகதி நடைபெறும். தொடர்ந்து மாவீரர் தின விழாக்கள் கோட்ட ரீதியாக நடைபெறும். இதன் விபரம் பின்வருமாறு:-

யாழ்ப்பாணக் கோட்டத்தின் மாவீரர் விழா இம்மாதம் இருபத்தோராம் திகதி பிற்பகல் ஒரு மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், தீவுப்பகுதிக் கோட்டத்தின் விழா இருபத்திரெண்டாம் திகதி பிற்பகல் இரண்டு மணிமுதல் புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும், தென்மராட்சிக் கோட்டத்தின் விழா இருபத்திமூன்றாம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வலிகாமம் கோட்டத்தின்விழா இருபத்து நான்காம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் வடமராட்சிக் கோட்டத்தின் விழா இருபத்தைந்தாம் திகதி பருத்தித்துறை வேலாயுதர் வித்தியாலயத்திலும்:

வலி - கிழக்குக் கோட்டத்தின் விழா இருபத்தாறாம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. அத்துடன் கோட்ட ரீதியாக இம்மாதம் பதினேழாம் திகதி நடைபெறும் மாவீரர் தினப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறும் நிகழ்ச்சிகளுக்கான மாவட்ட ரீதியான போட்டி இம்மாதம் பத்தொன்பதாம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (22)

## பாதுகாப்பு இன்மையால் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கிய சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதனால் இங்கு வருபவர்கள் வீதியிலேயே தமது சைக்கிள்களை நிறுத்துவதனால் ஆஸ்பத்திரி வீதியூடான போக்குவரத்து பெருமளவில் தடைப்படுவதுடன் வாகன விபத்துக்கள் ஏற்படக் கூடிய ஆபத்தும் உள்ளது. இதுவரை புதிய சைக்கிள் பாதுகாப்பு நிலையம் எதுவும் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இருநேரமும் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்களம் திங்கள் முதல் இரு நேரங்களில் தொழிற்பட ஆரம்பித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக ஒருவேளை மட்டுமே இவ்வலுவலகம் தொழிற்பட்டது. நேற்று மாலை வேளையும் இந்த அலுவலகம் தொழிற்பட்டது. (க)

கட்டடப் பொருள்

## கூட்டுத்தாபனகட்டடத்தில் உணவுக் களஞ்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள இலங்கை கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் கட்டடத் தொகுதி, உணவுக்களஞ்சியமாக பயன்படுத்தப்பட இருக்கிறது.

இக் கட்டடம் யாழ் செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டு. கப்பலில் இருந்து இறக்கப்படும் உணவுப் பொருள்களை இங்கு களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல களஞ்சியத் தேவைகளுக்காக மேலும் யாழ் நகரை அண்டிய சில கட்டடங்களைபொறுப்பேற்று பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கடந்த பல மாதங்களாக கப்பலில் வரும் உணவுப்பொருள்களை களஞ்சியப் படுத்துவதற்கு போதிய இடவசதி இல்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. (க)


### கலந்துரையாடல்

எமது கல்வி நிலையத்தில் பயிலும், பயில விரும்பும் உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவரும் (90, 91, 92 பிரிவு) 16 - 11 - 90 பிற்பகல் 4மணிக்கு தவறாது சமுகம் தரவும்.

இயக்குனர்
றேடியன்ற் கல்வி நிலையம்
புங்கன்குளம், அரியாலை.

(R/834)

### யாழ். தொழில் நுட்பக்கல்லூரி

எமது கல்லூரி மீண்டும் 19-11-1990 திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது. பகல் நேரப் போதனைகள் 19 ஆம் திகதி திங்கட்கிழமையும் பகுதி நேரப் போதனைகள் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் ஆரம்பமாகிறது. சகல வகுப்புகளும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 2-00 மணிவரை நடைபெறும்.

சி. இராசேந்திரா.
அதிபர்

பிறவுண் வீதி,
கொக்குவில்.

(B/1588)

### NEW BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

கலை, வர்த்தகம்
A/L 90, 91, 92.
வழமையான ஆசிரியர் குழுவினால்
ஆரம்பம்: 17-11-90
சனி காலை 9-00 A. M.

(R/ 835)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
மருத்துவபீடம்
### பரீட்சை ஆரம்பமாகும் திகதிகள்

கீழ்க்காணும் பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற உள்ளன

மருத்துவபீட மூன்றாம் ஆண்டு பரீட்சை (பகுதி-11)
20 - 12 - 1990

மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை
27 - 12 - 1990

மருத்துவபீட மூன்றாம் ஆண்டு மீள் பரீட்சை
(பகுதி 1, பகுதி 11) 08 - 04 - 1991

(B/1593) - பதிவாளர்

**சிந்தனைக்கு**

நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய் — அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள்.

— பாரதியார்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 15-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகம் 2208
த.பெ.எண் 05


# சீனாவுடன் நெருக்கமாகிறது சிறிலங்கா...

இன அழிப்பிற்கு எதிரான வகையிலும், சர்வதேச உதவிகள் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஏற்பவும் சிறிலங்கா அரசாங்கம் தனது வெளிநாட்டு உறவுகளில் தற்பொழுது பெரும் மாற்றங்களைச் செய்துள்ளமை வெளிப்படையாக உணரப்படுகின்றது.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினோடும், அதைத் தொடர்ந்து ஈரோசாவில் ஏற்பட்ட பெரும் அரசியல் மாற்றத்தோடும் தொடர்புபட்ட சிறிலங்காவின் இந்தக் கொள்கை மாற்றம் இடம்பெற்றது.

1948 இல் அந்நியர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் முழுமையாக மேற்கை நம்பியிருந்த சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது கிழக்கு ஆசிய நாடுகளையும் (யப்பான், தென்கொரியா, சீனா) அரபு உலகையுமே தமது பிரதான நட்பு நாடுகளாகக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம் யப்பானிடம் இருந்து பொருளாதார உதவிகளையும், சீனாவிடம் இருந்து ஆயுத தளபாட உதவிகளையும் பெறுவதில் சிறிலங்கா அக்கறை காட்டுகின்றது.

இன்று சிறிலங்காவின் பிரதான ஆயுத விநியோகஸ்தர் சீனா ஆகும். 1972 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து சிறிலங்காவிற்கான ஆயுத விநியோகஸ்தராக சீனா மாறியது. இலங்கையில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன சுடுகலன்கள் (ரி-56ரக துப்பாக்கி) சீனாவிலேயே தயாரிக்கப்பட்டதாகும். அதைத் தொடர்ந்து இனப்பிரச்சினை தீவிரமடைய அதை சீனா விநியோகித்த ஆயுதங்களின் தொகையும், தரமும் அதிகரித்தே வந்தன. இன்று பாரிய குண்டு வீச்சு விமானங்கள், கடற்படைக்கப்பல்கள் என்பனவற்றை அது விநியோகித்து வருகின்றது.

சிறிலங்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் இந்த இராணுவ ரீதியான உறவு வளர்ச்சிக்கு இந்தியாவே மூலகாரணமாகும். சிறிலங்காவில், ஆட்சிக்கு வரும் இந்திய எதிர்ப்பு வாதத்தை அடிப்படை அரசியல் கொள்கையாகக் கொண்டிருந்தனர். அதேவேளை சீனா இந்தியாவுடனான கருத்து முரண்பாட்டால் ஒரு போரையே நடத்திய நாடு இந்நிலையில் இருவருக்கும் இடையில் நட்பு வளர்வதற்கு இந்த எதிர்ப்பு உணர்வே அடிப்படையாக இருந்தது. இதனை இந்த இரு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகள் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

எடுத்துக்காட்டாக சிறிலங்கா பாகிஸ்தான் நட்புறவு - இராணுவப்பயிற்சி, ஆயுத விநியோகம்-சீனா பாகிஸ்தான் நட்புறவு - அணு ஆயுத ஒத்துழைப்பு, இராணுவதளபாட உதவி - சீனா நேபாள உறவு - ஆயுத விநியோகம், சீனா பங்களாதேஷ் நட்புறவு - வெள்ளப் பெருக்குதடை உதவி - என்பனவற்றைக் கொள்ளலாம்.

அதாவது இந்தியாவிற்கு எதிராக தென் ஆசியாவில் பலமான ஓர் எதிரணியை அமைப்பதே சீனாவின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. இந்நிலையில் இலங்கை இனப் பிரச்சினையில் சீனா இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாடு என்ற ரீதியில் சிறிலங்காவிற்கு ஆதரவான நிலையை எடுத்துள்ளது.

மேலும், மோசமான பொருளாதார நெருக்கடியில் உள்ள சீனா உலகில் இன்று பணம் திரட்டும் பிரதான வர்த்தகமான ஆயுத விற்பனையின் மூலம் பெரும் அந்நியச் செலவாணியையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டாகின்றது.

இவற்றின் காரணமாக, இன்று சர்வதேச மனித உரிமைகள் சிறிலங்காவில் மீறப்படுவதாகவும் இனப் படுகொலைகள் நடத்தப்படுவதாகவும் உலகில் எழும் குரல்கள் சீனாவிற்குக் கேட்காமல் போய்விட்டன.

அதேவேளை கேட்டாலும் சீனா பெரிதாக அலட்டிக் கொள்ளப்போவதில்லை. ஏனெனில் லட்சக்கணக்கான கம்போடியர்களைப் படுகொலை செய்த பொல்பொட் அரசாங்கத்தின் கமறூச் குழுவினருக்கு ஆயுதமும், பயிற்சியும் தனமும் கொடுத்ததும், பீக்கிங் தியமென்மன் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான சீன மாணவர்களையே சுட்டுக்கொன்றதும் இந்தச் சீன அரசாங்கமே.

இந்த நிலையில் தமிழீழ மக்கள் ஒன்றைப்புரிந்து கொள்ள வேண்டும். உலகில் உள்ள 170 க்கும் மேற்பட்ட நாடுகள் ஒவ்வொன்றும் தமது விருப்பு வெறுப்புக் களுக்கும், இலாப நட்டங்களுக்கும் ஏற்பக் கூட்டுக்கள் சேரும். இந்த நிலையில் ஒரு பகுதி உறவு பலவீனப் படுவதால் எதிரி முற்றாகப் பலவீனமடைந்து விட மாட்டான். எனவே எங்களின் எதிர்த்துப் போராடும் சக்தியே எதிரியைத் தோற்கடிக்கும்.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



''என்ன நடந்தது! என்று விசாரித்தேன். அப்போது அருகில் நின்ற ஒருவர் குறுக்கிட்டு நாலாயிரத்து ஐநூறு ரூபாவுடன் வெருகலில் இருந்து இந்தப் பிள்ளைகளின் தந்தை வாழைச்சேனைக்குப் பொருள்கள் கொள்வனவு செய்யப் போனதாகச் சொன்னார். இங்கிருந்து வாகனம் எதுவும் போவதாகத் தெரியவில்லையே? என்றேன். சைக்கிளில் தான் சென்றார். எல்லா வியாபாரிகளுமே சைக்கிளில் சென்றுதான் பொருள்களை வாங்குகின்றார்கள்' என்றார். ஏதாவது சின்னப் பிரச்சினைகளென்றாலும் ஓட்டமாவடிப் பாலத்தில்தான் முஸ்லிம் காடையர்கள் சண்டித்தனம் செய்வதும், ஆட்களைக் கடத்துவதும் வழக்கம். வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் 85ஆம் ஆண்டுக் கலவரத்தின்போதும் (தமிழ் - முஸ்லிம்) இவ்வாறு பல சம்பவங்கள் நடந்தன ''எனவேஓட்டமாவடிப்பாலத்தால் போவது பிரச்சினை தானே! ஏன் அந்த வழியால் போகிறார்கள்?என்றுவிசாரித்தேன். ஓட்டமாவடி வழியாக இல்லை. வாழைச்சேனைக்கு நேரெதிரே உள்ள நாசிவன் தீவு என்னும் இடத்திற்குச் சென்று அங்கிருந்து தோணி மூலம் வாழைச்சேனைக்குச் செல்வார்கள் என்றார் வாழைச்சேனையில் பொருள்கள் வாங்கத் தடையில்லையா? என்று கேட்டேன். வாழைச் சேனையில் தற்போது முஸ்லிம்களின் கடைகள் மட்டுமே உள்ளன. இக்கடைகளுக்கு பள்ளிவாசல்கள் சில நிபந்தனைகளை விதித்துள்ளன. வழக்கமாக ஒரு பொருளுக்கு ஒரு விலையென்றால் தமிழர்களுக்கு விற்கும்போது ஒரு விசேட வரியையும் சேர்த்து கடைக்காரர் வசூலிக்கவேண்டும். குறிப்பிட்ட அந்த வரிப் பணத்தை பள்ளிவாசலுக்கான உண்டியலில் உடனே போட்டுவிட வேண்டும். இதற்காக ஒவ்வொரு கடைகளுக்கும் பள்ளிவாசல்கள் ''வரி உண்டியல்'' என்று ஒன்றைக் கொடுத்துள்ளார்கள் என்றார். தேங்காய்க்கு வரி எவ்வளவு? என்றேன். ஒரு தேங்காய் தமிழருக்கு விற்றால் ஒரு ரூபாய் வரி. அந்தக் காசையும் தமிழரிடம் அறவிட்டுப் போட வேண்டியதுதான். இப்படியே ஒவ்வொரு பொருள்களுக்கும் வேறுபட்ட வரி என்றார். கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் போராளிகள் சாராயம், சிகரெட் போன்ற பொருள்களுக்குவரிவசூலிப்பது போல் ஓர் ஒழுங்கமைக்கப் பட்ட செயற்பாட்டில் பள்ளிவாசல்கள் இப்படியான முடிவுகளை எடுத்துள்ளன என்பதை உணரமுடிந்தது. எனவே ''வரிதான் அறவிடுகின்றார்களே, பின்பு ஏன் தமிழர்களைக்கொல்கிறார்கள்'' என்றேன். - ''கிழக்கு மாகாணத்தில் தமிழர்களைக் கொல்வதென்பது இப்போது சமூக மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு'' என்றார். எல்லா முஸ்லிம்களும் இதற்குச் சம்மதிப்பார்களா? அவர்களுக்கு தமிழ் மக்களின் நிலங்களுக்கு மத்தியில் காணி உள்ளது அதில் தான் விவசாயம் செய்ய வேண்டும். தமிழர் மத்தியில் தான் கடை நடத்தவேண்டும். பிறருக்குப் போவதானால் கூட தமிழர் நிலங்களுக்குள்ளால் தானே செல்ல வேண்டும். அப்படியானால் எல்லா முஸ்லிம்களும் இதற்குச்சம்மதிப்பார்களா? நீண்ட காலம் ஒன்றாக வாழ்ந்தவர்களை அழிப்பது சாத்தியமா'' என்றேன். அதற்கு அவர் ''முஸ்லிம்கள் மத்தியில் ஒரு சமூகக்கட்டுப்பாடு உண்டு. அதாவது பள்ளிவாசல்கள் என்ன முடிவை எடுக்கின்றனவோ அந்த முடிவுக்கு அந்தப் பள்ளிவாசல்களைச் சேர்ந்தவர்கள் கட்டுப்பட்டே ஆகவேண்டும். தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு என்ன கருத்தும்இருக்கலாம். ஆனால் பள்ளிவாசல்களின் முடிவை எந்தக் காரணத்தாலும் மீற முடியாது. கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழர்கள் ஒழிக்கப்படவேண்டியவர்கள். எனவே அந்த நடவடிக்கை தொடர்ந்த வண்ணமே இருக்கும். அதுவரை இடைக்கால ஏற்பாடாகத்தான் இந்த வரி வசூலிப்பு முறையை அமுல் படுத்தியுள்ளார்கள்'' என்றார்.

**14**

> முஸ்லிம் கடைகளுக்கு பள்ளிவாசல்கள் சில நிபந்தனைகளை விதித்துள்ளன. வழக்கமாக ஒரு பொருளுக்கு ஒரு விலையென்றால் தமிழர்களுக்கு விற்கும்போது ஒரு விசேட வரியையும் சேர்த்துக் கடைக்காரர் வசூலிக்க வேண்டும். குறிப்பிட்ட அந்த வரிப்பணத்தை பள்ளிவாசலுக்கான உண்டியலில் உடனே போட்டுவிட வேண்டும். இதற்காக ஒவ்வொரு கடைகளுக்கும் பள்ளிவாசல்கள் வரி உண்டியல் என்று ஒன்றைக் கொடுத்துள்ளன.

''இதுசாத்தியமாகக் கூடிய விடயமா. முஸ்லிம்கள் மத்தியில் எத்தனை கல்விமான்கள் உள்ளனர். அவர்கள் இதற்கு சம்மதிப்பார்களா?'' என்று சந்தேகத்துடன் கேட்டேன். அவர்களின் கூற்றையார் மதிக்கிறார்கள். மதவெறியை ஊட்டி ஓரணியில் திரள வைக்கிறார்கள். 85 ஆம் ஆண்டும் இது போல கலவரங்கள் ஏற்பட்டபோதுஇதேபள்ளிவாசல்கள்தான் முஸ்லிம் காடையர்களிடம் பிடிபடும் தமிழர்களை விடுவிப்பதிலும் சமூக உறவுகளை சீராக்குவதிலும் ஈடுபட்டிருந்தன. ஆனால் இன்று நிலைமை எவ்வளவு தலைகீழாகப் போய்விட்டது'' என்றார்.

''இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் ஒன்று இருக்கவேண்டுமே - அது என்னவென்று தெரியவில்லையா?'' என்று கேட்டேன் ''நிச்சயமாக இதற்கு ஒரு பெரிய பின்னணி உண்டு. இது என்னவென்று எமக்குப் புரியவில்லை. ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். தமிழர்களைக் கொல்வதற்கு முன் அனைவரும் பள்ளிவாசல்களில் கூடுகின்றார்கள். அங்கு சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சிறிது நேரத்தில் இராணுவம் அந்த இடத்துக்கு வரும் இராணுவத்துடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல் படையினர் அனைவரும் செல்கின்றார்கள் அப்படிப் புறப்படும் நாளில் பாரிய இன அழிவு நிச்சயம்'' என்றார். பள்ளிவாசல்களில் என்ன கருத்து முன்வைக்கப்படுகிறது என்று தெரியுமா? என்றேன். அது தெரியவில்லை. அந்தளவுக்கு பள்ளிவாசல்களை நெருங்கிப் பார்க்கவோ, அவதானிக்கவோ முடியாது. முன்பு போல எம்மோடு நெருங்கிப் பழகிய முஸ்லிம்களும் இந்த விடயங்கள் பற்றி எதுவும் கதைப்பதில்லை. ஆனால் ஒரு விடயம் மட்டும் தெரிந்து கொண்டோம் என்றார். ''என்ன அது?'' என்று கேட்டேன். இப்போது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ''புனிதப்போர்'' என்று பெயரிட்டிருக்கிறார்கள் என்றார்.

''மனிதத்துவத்துக்கு சமாதி கட்டும் ஈனச் செயலுக்கு புனிதப்போர் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதற்கு ஏதோ பின்னணி இருக்க வேண்டும்'' என்று நினைத்துக்கொண்டேன். சில நாட்களின் பின் அதற்கு விடை கிடைக்கத்தான் செய்தது.

(தொடரும்)

# இடஒதுக்கீட்டுப் பிரச்சினையை ஒரேயடியாக கைவிட முடியாது

— சந்திரசேகர்

பின்தங்கிய வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையைஒரேயடியாகக் கைவிடமுடியாது. இருசாராரும் ஏற்கக் கூடிய வகையில் கையாள வேண்டும் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

''ரைம்ஸ் ஒப் இந்தியா'' என்ற பத்திரிகைக்கு பேட்டியளித்த போது சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்தார். போதிய வேலைவாய்ப்பினை இளைஞர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதன் மூலம் இலகுவாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் எனக் கூறினார்.

அதே போலவே ராம ஜென்ம பூமி - பாபர் மசூதி பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் எனத் தெரிவித்தார். மதத்தலைவர்களே தங்களுக்கிடையில் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டுமே தவிர அரசியல்வாதிகள் அல்லவென்றும்அவர் தெரிவித்தார்.

இதே வேளை பாரதிய ஜனதாக் கட்சியும், விஸ்வ ஹிந்து பரிஷத்தும் ராமர் பிறந்த இடம், சிவனின் புண்ணிய ஸ்தலம், கிருஷ்ணர் பிறந்த இடம் ஆகியவற்றில் உள்ள பள்ளிவாசல்களை இடித்து புனித ஸ்தலமாக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றன.

# யாழ். வைத்தியசாலையில் அவசிய தேவைக்கே மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு அத்தியாவசியமாக தேவையான பகுதிகளுக்கே தேவைக்கேற்ற வகையில் நேர சூசிகையின்படி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது நீர் மின்சாரம் வடபகுதிக்கு இல்லாதபடியால் வைத்தியசாலை மின்விநியோகம் ஜெனரேட்டர்கள் மூலம் வழங்கப்படுகிறது. வைத்திய சாலைப் பகுதிக்கு 250 கிலோ வோட் அம்பியர் மின்சாரம் பொதுவாக தேவை. ஆனால் தற்போது வைத்தியசாலையில் இருக்கும் இரண்டு ஜெனரேட்டர்களில் ஒன்றிலிருந்து 55கிலோ வோல்ட் அம்பியர் மின்சாரமும், மற்றையதில் இருந்து 27.5 கிலோ வோல்ட் அம்பியர் மின்சாரமுமே கிடைக்கின்றது. ஆகவே வைத்திய சாலையின் ஒட்டுமொத்த தேவையில் மூன்றிலொரு பகுதி மின் தேவையையே எம்மால் இப்பொழுது நிவர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது என யாழ் மின்சார அத்தியட்சகர் எஸ். ரீ. கணநாதன் தகவல் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் வைத்திய சாலை மின்சார நிலைமை பற்றி குறிப்பிடுகையில் யாழ் மாவட்டத்திற்கு நீர் மின்சாரம் கொண்டுவரப்படுமிடத்து அந்த மின்சாரத்தை உடனடியாக வைத்தியசாலைக்கு வழங்கும் வகையில் மின் மாற்றிகள் திருத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (லோ)

## இராணுவ நடவடிக்கையால்

# மக்கள் வங்கிக் கிளைகள் இயங்க முடியாத நிலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய பகுதி மக்கள் வங்கிக் கிளைகள் சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்க முடியாத நிலையில் உள்ளன.

இவ்வங்கிக் கிளைகளை இடம் மாற்றி இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு வட பிராந்திய உதவிப் பிரதேச முகாமையாளருடன் மேற்படி வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களும் இணைந்து முயற்சி எடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் பற்றி இந்த அதிகாரிகள் குழு மேற்படி மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறது.

இவ்விருமக்கள்வங்கிக்கிளைகளும் செயற்படாததினால் இவ்வங்கியின் வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். (க)

# 1500 ரூபாமேல்வருமானம்; ஒருமாத இலவச நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

ஆயிரத்தி ஐநூறு ரூபாவுக்கும் அதிகமான மாதாந்த வேதனம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு ஒருமாத காலத்துக்கு இலவச உலர் உணவு வழங்குவது பற்றியும், யாழ்மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கப்பல் மூலம் மா கொண்டுவருவதுபற்றியும் அங்கீகாரம் பெற்றுவருவதாக யாழ் அரச அதிபர் ன்ரன் அல்பிரட் கொழும்பிலிருந்து தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண செயலக மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் இதனை தெரிவித்தார் நாளை வெள்ளிக்கிழமை காலை யாழ் அரச அதிபர் யாழ்ப்பாணம் திரும்ப உள்ளார் என்றும் தெரிவித்தார். (லோ)

# அம்புலன்ஸ் சேவை

(மானிப்பாய்)

தெல்லிப்பழை அரசினர் மருத்துவ மனையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களும் இணைந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப் பகுதியில் இருந்து அம்புலன்ஸ் சேவையை வழங்கி வருகின்றனர்.

இவர்கள் கடந்தகால விமானத் தாக்குதல்களின்போது காயமடைந்த பல பொதுமக்களுக்கு முன்னறிவித்தல் எதுவுமின்றி ஸ்தலத்திற்குச் சென்று தமது சேவையை வழங்கியுள்ளனர்.

இவர்களுடைய சேவைகள் போர்க்கால நிலைமையை கருத்தில் கொண்டு 24 மணி நேரமும் நடைபெறுகின்றது.

# நோயாளருக்குத் தரம் குறைந்த உணவு

(சங்கானை)

சங்கானை அரசினர் மருத்துவ மனையில் தங்கியுள்ள நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் வழங்கப்படும் மதிய நேர உணவு மிகவும் தரம் குறைந்ததாகவும், அதற்குள் பெருமளவு கற்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நோயாளர்கள் இதைப் பல தடவைகள் உரியவர்களுக்கு எடுத்துக்காட்டியும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நோயாளர் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். (ச)

யதார்த்த

களின் விடுதலை உணர்ச்சிகளைக் கலை வடிவங்களாக வெளிக்கொண்டு வருவதற்கு தமிழீழ கலைஞர்கள் முன்வர வேண்டும். இக்கலை வடிவங்கள் எதிரிகளுக்கு உலைவைப்பனவாக அமைய வேண்டும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் நுண்கலைப்பீட விரிவுரையாளர்களும் மாணவர்களும் கலந்து சொண்டனர். (க)


## மரண அறிவித்தல்

### செபஸ்ரியாம்பிள்ளை பொன்ராஜ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை பொன்ராஜ் காலமாகிவிட்டார். இவர் மேரி மாத்தா யோசப்பின் (சொர்ணம்) அன்புக் கணவரும், அன்ரன் பயஸ் (சுவீடன்), அன்ரனிற்றா றதினி (அவுஸ்திரேலியா), அலிஸ்ரன் கயஸ் (கனடா), ஒஸ்ரன் டலஸ் (கனடா), லின்ரன் றூபஸ் (டென்மார்க்), டனிஸ்ரன் பவல்ஸ், யூக்கலிஸ்ரா றமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசா கபிரியேல் மதுரநாயகம் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிவுல் மேரியோவின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (15-11-90) மாலை 4 மணியளவில் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார் உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
A சில்வஸ்ரர்.

(R- 836)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அரசின் கல்விக் கொள்கைகள் தமிழருக்கு பொருத்தமானவையல்ல

## தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்

(பண்டத்தரிப்பு)

இன்றைய இலங்கைஅரசின் கல்விக்கொள்கைகள், பாடவிதானங்கள் ஈழத் தமிழருக்கு பொருத்தமானவை அல்ல. வடக்குகிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களது கலை கலாசாரம், பண்பாடு, சமயம், மொழி இவற்றின்தேவைக்கும் மெருகூட்டலுக்குமாக வகுக்கப்பட்டவையுமல்ல. சிங்கள மக்களுக்காக அவர்களது மொழி, இலக்கியம், கலைகலாசார தேவைகளை கருத்திற் கொண்டு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டவை.

ஒருஇனத்தின் தேவைகளை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மொழியால் கலை கலாசாரத்தால் வாழ்க்கை முறையால் சமயநெறி முறையால், புவியியலால் வேறுபட்ட இன்னொரு இனத்திற்கு எப்படிப் பொருந்தும்? ஒருக்காலும் ஆரோக்கிய அபிவிருத்திக்கு உதவாது. பிறருக்காக வகுக்கப்பட்டு மொழி பெயர்க்கப்பட்ட திட்டங்கள் ஆகும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது தலைமைப் பணிமனையை நல்லூர்இந்துவிடுதியில்நேற்று முன்தினம் எளிமையாக திறந்த வைபவத்தில் உரையாற்றிய பொதுச்செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்தார்.

முன்னாள் யாழ்மாவட்டச் செயலாளர் திரு. இ. சிவபாலசிங்கம், முன்னாள் காங்கேசன்துறைச் செயலாளர் திரு. க. சுப்பிரமணியம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி சம்பிரதாய பூர்வமாக திறந்துவைத்தனார்.

நிருவாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராஜா வைபவத்திற்கு தலைமை தாங்கினார்.

திரு. மகாசிவம் தொடர்ந்து பேசுகையில் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு ஏற்ற கல்வித்திட்டம் தனியான ஒரு குழுவால்(இந்த பிரதேச கல்விமான்களால்) தயாரிக்கப்பட வேண்டும்.

முன்னாள் யாழ் மாவட்ட பொருளாளர் திரு. கா. பொ. குலசிங்கம் உட்பட பல பழைய புதிய சங்க நிருவாகிகள் திறப்புவிழாவில் பங்குபற்றினர்.

விமான

தயாரிப்பான வை-12 விமானங்கள் மூன்று கொழும்பு வந்து சேர்ந்ததாகவும், இவ் விமானங்களுடன் சிறிலங்கா விமானப்படையில் வை-12 ரக விமானங்களின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சீனாவிடம் இருந்து ஏ-5 ரக குண்டுவீச்சு ஜெட் விமானங்களையும், சிறிலங்கா வாங்கத் திட்டமிட்டுள்ளதாகவும், தற்பொழுது இவ் ஏ-5 ரக விமானங்களைச் செலுத்துவதில் சிறிலங்கா விமானப் படையினர் சீனாவில் பயிற்சி பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, நவீனப் போர்க் கப்பல்கள் சிலவற்றையும் சீனாவிடம் இருந்து வாங்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் விண்ணப்பங்களைக் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளதோடு, இந்த யுத்தக் கப்பல்களைக் கட்டும் தளமொன்றை சீனாவின் உதவியுடன் சிறிலங்காவில் கட்ட ஆலோசித்து வருவதாகவும் அச் செய்தி தெரிவித்தது.

மேலும் அச் செய்தியில் எஸ். எஸ். 260 ரக போர் விமானங்களையும் இத்தாலியிடம் இருந்து வாங்குவதற்கு சிறிலங்கா முயன்றுள்ளதாகவும், இதன் காரணத்தால் மேற்கு ஐரோப்பாவில் சிறிலங்கா விமானப்படை விமானிகள் பயிற்சி பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீண்டும்----

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையில் மாணவர்களை ராக்கிங் என்ற பெயரில் இம்சைக்குள்ளாக்குவது மிகவும் வேதனை அளிக்கும் விடயமாகும்.

கிராமத்தில் இல்லாத

முறையிட்டுள்ளனர். இவர் கடமைக்கு வராததனால் இன்னுமொருகிராம சேவையாளர் சமூக உணர்ச்சியுடன் இவரது பகுதிக் கடமைகளைக் கவனித்து வருகின்றார். இராணுவ நடவடிக்கைகளினால் அல்லலுற்ற இவ் வேளையில் இவரது கடமையுணர்ச்சியைப் பற்றி இப்பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (15)

# போராளிகளின் பெயரில் வீதிகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி மந்துவிலில் இரு வீதிகளுக்கு லெப். மரைக்கார், லெப். கணேஸ் ஆகிய இரு போராளிகளின் பெயர்கள் சூட்டப்பட உள்ளன.

மந்துவில் சந்திரன் கேணி வீதிக்கு லெப். மரைக்கார் வீதி என்றும், ஒட்டக்குழி வீதிக்கு லெப். கணேஸ் வீதி என்றும் மாவீரர் தினவிழா ஆரம்ப நாளாகிய 21 ஆம் திகதி மூன்று மணிக்குச் சிற்றூரவையினரால் பெயர் சூட்டப்படும்.

அதனைத் தொடர்ந்து சிறீகாந்தன் சனசமூக நிலையத்தின் முன்பாக மாவீரர் சிறுவர் பாடசாலை ஒன்றும் திறந்து வைக்கப்படும். இவ் வைபவங்களில் தென்மராட்சிப் பிரிவு அரசியற் பொறுப்பாளர், யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள், சிற்றூரவை முக்கியஸ்தர்கள்கலந்துகொள்வார்கள். (மு)

திருமலையில்

வெடியில் சிக்கியதில் ட்ரக் வண்டி முற்றாகச் சேதமடைந்தது. அதில் வந்த இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை தெரியவில்லை. இச்சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து வந்த சிறிலங்கா விமானப் படையினரின் இரு பொம்மர்களும், ஒரு ஹெலியும் விமானத் தாக்குதல்களை நடாத்தின.

வாழைப்பாடியின்

ளில் விடுதலைப் புலிகள் இல்லை என்றும் தமிழக அரசு தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது எதிரணிக் குழுக்களும் முகாம்களில் இல்லை என்றும், இது விடயத்தில் அரசாங்கம் அவதானமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நவீன---

தற்போது திருத்தவேலைகள் இடம்பெற்று கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடத்தில் இருந்த மலசல கூடம் ஒன்றைப் பக்கத்துக் கடைக்காரர் ஆக்கிரமித்துக் கடையாக மாற்றியுள்ளார். இந்தச் செயற்பாடானது வெந்து போயுள்ள உள்ளங்களை நொந்துபோக வைப்பதாக உள்ளதென பொதுமக்களால் பேசப்படுகின்றது.

# ஹெலிதாக்கு

(தெல்லிப்பழை)

நேற்றுமாலை 2 மணியளவில் ஏழாலை, கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் ஹெலி ஒன்று கலிபர் தாக்குதல்களை நடாத்தியது. சுமார் 30 நிமிடங்கள்வரை நடைபெற்ற இத்தாக்குதலில் ஏழாலை முனியப்பர் கோயில் பகுதியில் சில வீடுகள் சிறிது சேதமடைந்தன.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு சிரமதானம்

(தெல்லிப்பழை)

எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகும் மாவீரர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி மக்கள் சிரமதான அடிப்படையில் வீதிகளைத் துப்பரவு செய்து வருகின்றனர். (ச)

# போலியோ தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் செஞ்சிலுவைச் சங்க முதலுதவி நிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை 19 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு குழந்தைகளுக்கான போலியோ தடுப்பூசி போடப்படும் என தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

படகு

ளைக் கொண்டு செல்லும் போது மேலும் இருவர் மரணமடைந்தனர். இறந்தவர்களின் உடல்களுடன் அவர்கள் சென்ற வள்ளமும் நீரில் மூழ்கடிக்கப்பட்டது. ஏனையோர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (மு)

கொம்படிப்

கிழித்தெறியப்பட்டுள்ளன.

கடிதங்களை எடுத்துச்சென்றவர்கள் வவுனியாவில் நடத்தப்படும் சோதனை நடவடிக்கைக்குப் பயந்து இக்கடிதங்களைக்கிழித்தெறிந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.